**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 413 of 2025 |

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : பவுன்ராஜ்

Father's Name : பாண்டியன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of April** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் கோவை மாவட்டம் கணியூரில் குடியிருந்து கொண்டு எலக்ட்ரீசியன் ஆக வேலை பார்த்து வருகிறேன். என்னுடன் பிறந்த ராஜேஷ் என்பவர் படித்து வேலை இல்லாமல் இருந்ததால் கோவை வேலைக்காக சம்பவம் நடப்பதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு வந்தார். நாங்கள் இருவரும் பல இடங்களில் வேலைக்காக தேடி வந்தோம். கடந்த 21.06.2018 ஆம் தேதி வேலை தேடுவதற்காக எனது யமஹா TN 37 CW 2361 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்காக நீலாம்பூரிலிருந்து கருமத்தம்பட்டி செல்லும் சாலையில் LPT பேருந்து நிறுத்தம் அருகே சென்று கொண்டிருந்த பொழுது எனது தம்பி வாகனத்திற்கு முன்பாக சென்று கொண்டிருந்த TN 67 D 3860 என்ற பதிவெண் கொண்ட லாரி எந்த சைகையும் செய்யாமல் திடீரென பிரேக் போட்டதால் எனது தம்பி கட்டுப்பாட்டை இழந்து லாரியின்

பின்னால் மோதி விட்டார். அவர் மோதியதில் எனது தம்பியின் தலைப்பகுதியில் பலத்த அடிப்பட்டது. எனது தம்பி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக என்னுடன் வேலை பார்த்து வந்த ரஞ்சித் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். நானும் உடனே சென்று சம்பவத்தில் பார்த்த பொழுது எனது தம்பி தலையில் பலத்த அடிப்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக எனது தம்பியின் பிரேதத்தை கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். பின்னர் மருத்துவர்கள் எனது தம்பியின் பிரேதத்தை சவக்கிடங்கில் வைத்தார்கள். சாட்சி மீண்டும் தானே கூறுகிறார் லாரியின் பதிவு எண் சரியாக ஞாபகம் இல்லை. பின்னர் இது சம்பந்தமாக நான் சூலூர் காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தம்பி மனைவி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் டிப்ளமோ வரை படித்து உள்ளேன். சம்பவ காலத்தில் நான் கோவையில் கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். எனது தம்பி தான் வேலை தேடி கோவை வந்தார். எனது தம்பி பிஏ தமிழ் படித்துள்ளார். சம்பவத்தின் பொழுது எனது தம்பிக்கு வயது சுமார் 22 அல்லது 23 இருந்திருக்கும். சம்பவமானது அவிநாசி கோவை செல்லும் சர்வீஸ் ரோட்டில் நடைபெற்றது. சம்பவம் குறித்து எனக்கு என்னுடன் வேலை பார்த்து வந்த ரஞ்சித் என்பவர் தகவல் சொன்னார். நான் சம்பவ இடம் சென்ற பொழுது சுமார் 08:30 மணி இருக்கும். நான் சம்பவ இடம் சென்ற பொழுது எனது தம்பியின் உடல் சம்பவ இடத்தில் இருந்ததா என்றால் இருந்தது. நான் சம்பவம் இடம் சென்றபோதே 108 ஆம்புலன்ஸ் சம்பவ இடம்வந்திருந்தது. ஆம்புலன்ஸ் உடன் நான் செல்லவில்லை, என்னுடன் பணி செய்தவர்களை அனுப்பி வைத்தேன். நான் பின்னால் சென்றேன். நாகராஜன் என்பவரை ஆம்புலன்சில் அனுப்பி வைத்தேன். நான் அளித்த புகார் மற்றும் போலீசார் விசாரணையின் பொழுது நாகராஜ் எனது தம்பி உடன் ஆம்புலன்ஸில் சென்றார் என்ற விவரத்தை குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. பொதுவாக கனரக வாகனங்கள் முன்னால் சென்று கொண்டிருந்தால் பின்னால் செல்லும் வாகனங்கள் இடைவெளி விட்டு பொறுமையாக தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எனது தம்பி முன்னாள் சென்ற லாரியை கவனிக்காமல் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சென்றதால் தான் முன்னால் சென்று

கொண்டிருந்த லாரி மீது மோதி விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றாலும், மேற்படி விபத்து என்னுடைய தம்பியின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. நாம் சம்பவ இடம் சென்ற பொழுது போலீசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**